17.05.12 13.45 ஆசிரியர்: K.தேவிபத்மநாபன்

வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ

திருச்சிராப்பள்ளி

மாநிலச்செய்திகள்

வாசிப்பவர் : சாந்திரமேஷ்

தலைப்புச்செய்திகள்

- சட்டவிரோதமாக மணல் கடத்துவோரை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும் - முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரிக்கை.
- வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் இல்லத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை.
- புதுக்கோட்டை சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் தேமுதிக-விற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு.
- ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னை சூப்பர்கிங்ஸ் - கிங்ஸ்லெவன் பஞ்சாபை இன்றுமாலை 4 மணிக்கு எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ஜெயலலிதா

தமிழகத்தில், சட்டவிரோதமாக மணல் கடத்துவோர் யாராக இருந்தாலும் அவர்களை அரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும் என்று, முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களின் குடிநீர் தேவைக்கும், விவசாயத்திற்கும் ஆதாரமாக விளங்கும் இயற்கையின் வரப்பிரசாதமான ஆற்றுப்படுகைகளை சமூகவிரோதிகள் சுய லாபத்திற்காக சேதப்படுத்துவதை தமது அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று கூறினார்.

அண்மையில் திருப்பத்தூர் வட்டம், ஜெயபுரம் கிராமத்தில் மணல் கடத்தலை தடுக்க முயன்ற கிராம உதவியாளர் திரு.ராஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டிய முதலமைச்சர், இதுதொடர்பாக 6 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இவர்களை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மீதமுள்ளவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அஇஅதிமுக அரசின் கடந்த ஓராண்டுகால ஆட்சியில் மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் மீது, 4 ஆயிரத்து 173 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 5 ஆயிரத்து 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் பட்டியலிட்டார்.

இதுவரை 14 கோடி ரூபாய் அளவிற்கு அபராத தொகை வசூலிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய முதலமைச்சர், 12 பேர் தடுப்பு காவல்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

அண்டை மாநிலங்களுக்கு மணல் கடத்துவது, சட்டவிரோதமாக மணல் அள்ளுவது ஆகியவை முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆண்டொன்றுக்கு 120 கோடி ரூபாயாக இருந்த மணல் வருவாய், கடந்த ஓர் ஆண்டில், தாமிரபரணி ஆற்றில் மணல் அள்ளாத சூழ்நிலையிலும், 197 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பதாக செல்வி ஜெயலலிதா எடுத்துரைத்தார்.

## லஞ்ச ஒழிப்பு

வருமானத்திற்கு அதிகமாக 2 கோடியே எண்பத்து எட்டரை லட்ச ரூபாய் அளவிற்கு சொத்து குவித்தது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் திமுக-வின் முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் இல்லத்தில் இன்று வருமானவரி அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

சேலத்தில் உள்ள அவரது வீடு மற்றும் கல்வி நிறுவனங்கள், தர்மபுரி, சென்னை உள்ளிட்ட அவரது உறவினர் இல்லங்கள் உட்பட 16 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

காலை 7 மணிமுதலே இச்சோதனையில், முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இதனிடையே, இவ்வழக்கை சட்டப்படி எதிர்கொள்ளப்போவதாக திரு.வீரபாண்டி ஆறுமுகம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## ஏர் இந்தியா

ஏர் இந்தியா விமானிகளின் வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்க கூட்டத்திற்கு அடுத்தவாரம் அழைப்பு

விடுக்கப்பட்டிருப்பதாக, சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. அஜீத்சிங் தெரிவித்திருக்கிறார்.

புதுதில்லியில் இதனை தெரிவித்த அவர், பதவி உயர்வு தொடர்பான அனைத்து அம்சங்கள் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்படும் என்றார்.

பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயாராக இருப்பதாகவும், இருப்பினும் 71 விமானிகளின் பதவிநீக்கம் திரும்பப்பெறவேண்டும் என்று இந்திய விமானிகளின் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

இதனிடையே, ஏர் இந்தியா விமானிகளின் வேலைநிறுத்தம் 10-வது நாளாக இன்றும் தொடர்கிறது.

இருப்பினும், உள்நாட்டு விமான சேவைகள் பாதிக்கப்படவில்லை என்று, ஏர் இந்தியா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள சர்வதேச பயணிகளின் சிரமத்தை குறைக்கும் வகையில், அவசர கால சேவைகளை நிர்வாகம் தொடங்கியுள்ளது.

முகுல் வாஸ்னிக்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு எதிரான வன்முறை வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், இதுதொடர்பான சட்டத்திருத்த குறித்து அரசு பரிசீலித்து வருருவதாக, மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரம் அளிப்புத்துறை அமைச்சர் திரு.முகுல் வாஸ்னிக் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதை தெரிவித்த அவர், இதற்கான வரைவு அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக கூறினார்.

இவர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டது தொடர்பாக தற்போது ஒரு லட்சம் வழக்குகள் தேங்கிக் கிடப்பதாகவும், இவற்றை விரைந்து முடிக்கும் வகையில் தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்படுத்த மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஜெய்ராம் ரமேஷ்

மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் வேளாண் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் என்று, ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஜெய்ராம் ரமேஷ் உறுதி அளித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதை தெரிவித்த அவர், இந்த திட்டம் தேவையின் அடிப்படையிலான திட்டம் என்றும், இதற்கான ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் குறைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

வேலையில்லாதோரின் எண்ணிக்கை ஐந்தரை கோடியிலிருந்து ஐந்து கோடியாக குறைந்திருப்பதை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூறிய அமைச்சர், இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதால் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வோரின் எண்ணிக்கையும் குறைந்திருப்பதாக கூறினார்.

ஆண்டுதோறும் இந்த திட்டம் ஆய்வு செய்யப்படுவதாகவும், இதற்கான அறிக்கை நவம்பர் மாதம் மக்களவையில் தாக்கல் செய்யப்படும் என்றும் கூறினார்.

இந்த திட்டத்தின்கீழ், கேரள மற்றும் தமிழகத்தில் அதிகமான மகளிர் பயன்பெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ், போலி அடையாள அட்டைகளின் புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், தனிநபர் சோதனை நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

யுரேனியம்

இந்தியாவிற்கு யுரேனியத்தை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன், தேவைக்கேற்ப ஆஸ்திரேலியாவின் யுரேனிய விநியோகம் அமையும் என்று, அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் மார்ட்டின் ஃபெர்கியூசன் தெரிவித்துள்ளார்.

மெல்பர்னில் இதை தெரிவித்த அவர், ஆஸ்திரேலியாவின் யுரேனிய வர்த்தகம் வேகமான வளர்ச்சி கண்டு வருவதாக குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கு யுரேனியம் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆஸ்திரேலியா கடந்த டிசம்பர் மாதம் வழங்கியதை அடுத்து, இதுதொடர்பான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இடைத்தேர்தல்

புதுக்கோட்டை சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் தேமுதிக. வேட்பாளருக்கு ஆதரவளிக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது.

இன்று சென்னையில் இதனை தெரிவித்த கட்சியின் மாநிலச்செயலர் திரு.ஜி.ராமகிருஷ்ணன், அஇஅதிமுக-வை அரசியல் ரீதியாக எதிர்க்கும் வகையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதனிடையே, வரும் 12-ம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலுக்காக 224 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளதாக, மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு.பிரவீன்குமார் கூறியுள்ளார்.

தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 10 கம்பெனி மத்திய காவல்துறையினர் ஈடுபடுத்தப்பட உள்ளதாக கூறினார்.

இந்நிலையில், இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது. மனுக்களை தாக்கல் செய்ய வரும் 25-ம் தேதி கடைசி நாளாகும்.

26-ம் தேதி மனுக்கள் பரிசீலிக்கப்படுகின்றன. வாக்கு எண்ணிக்கை அடுத்தமாதம் 15-ம் தேதியும் நடைபெறும் என்றார்.

மலர் கண்காட்சி

உதகை அரசு தாவரவியல் பூங்காவில், 116-வது வருடாந்திர மலர்கண்காட்சியை, மாநில வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் நாளை தொடங்கி வைக்கிறார்.

3 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில், ரெனன்குலஸ், டியூப்ரஸ், பெகோனியா, கிரிசாந்தமம், ஏசியாடிக் லில்லி உள்ளிட்ட 94 வகை மலர்கள் 15 ஆயிரம் தொட்டிகளில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

மேலும், வண்ண மலர்களால் வடிவமைக்கப்படும் தேசிய விலங்கான புலியின் உருவம், மாநில அரசின் விலங்கான நீலகிரி வரையாடு உருவமும் காட்சியில் இடம்பெறுகிறது.

இந்த ஆண்டு முதல்முறையாக தாவரவியல் பூங்காவை புகழிடமாக கொண்டு வசிக்கும் பறவைகளின் கிரீச் ஒலி சத்தங்கள் செயற்கை முறையில் ஒலிபரப்பப்படுகிறது.

முன்னணி ஓவியக்கலைஞர்களின் மணல் ஓவியங்கள் போன்றவையும் இதில் இடம்பெறும் என்று, ஆட்சித்தலைவர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.

உலக அளவில் சர்க்கரை நோய், ரத்த அழுத்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக, ஐ.நா. அறிக்கை தெரிவிக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் கணக்கெடுப்பில் மூன்றில் ஒருவர் ரத்த அழுத்த நோயாலும், 10 பேரில் ஒருவர் சர்க்கரை நோயாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் 13 கோடி மக்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ரெட் ரிப்பன்

எய்ட்ஸ் விழிப்புணர்வு ரெட் ரிப்பன் எக்ஸ்பிரஸ் ரயில் நாளை ராமநாதபுரம் வருகிறது.

வரும் ஞாயிற்றுக்கிழமை வரை பொதுமக்கள் பார்வைக்காக இது நிறுத்தப்பட்டிருக்கும்.

சிவகங்கையில் வரும் 21, 22 தேதிகளிலும், நாகையில் 23, 24 தேதிகளிலும் இந்த ரயில் கண்காட்சி இடம்பெறும்.

கரூரில் 3-வது நாளாக இன்று ஏராளமான பொதுமக்கள் இதனை பார்வையிடுகின்றனர்.

கரூரில் இன்று ரெட் ரிப்பன் எக்ஸ்பிரஸ் ரயிலின் கண்காட்சி நிறைவடைவதை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணி ஒன்றிற்கும் இன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு நேக்கோவின் ரெட்ரிப்பன் எக்ஸ்பிரஸ் ரயிலின் 3வது கட்ட பயணத்தை மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் குலாம்நபி ஆசாத் கடந்த ஜனவரி 12ம்தேதி புதுதில்லியில் கொடியசைத்து தொடக்கிவைத்தார்.

இருவரி

கன்யாகுமரி மாவட்டத்தில் இன்று 4 தாலுக்காக்களில் ஜமாபந்தி நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் இதில் பங்கேற்று மனுக்களை அளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் காலியாக உள்ள கொள்முதல் தரக்கட்டுப்பாடு மேற்பார்வையாளர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான செவித்திறன், மற்றும் பேச்சுபயிற்சி சிகிச்சையாளர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. தகுதியுடையவர்கள் பட்டயப்படிப்புதாரர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை ஒரு வாரத்திற்குள் தொடர்புகொள்ளலாம்.

குருபெயர்ச்சி

திருவாரூர் மாவட்டம், ஆலங்குடி ஆபத் சகாயேஸ்வரர் திருக்கோவில், தஞ்சை மாவட்டம் திட்டை வசிஷ்டேஸ்வரர் திருக்கோவில் மற்றும் சூரியனார் கோவில்களில் இன்று குருபெயர்ச்சி விழா நடைபெறுகிறது.

இதனையொட்டி, அரசு போக்குவரத்துக்கழகம் சிறப்பு பேருந்துகளை இயக்குகிறது.

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் தர்மசாலாவில் இன்றுமாலை 4 மணிக்கு சென்னை சூப்பர்கிங்ஸ் - கிங்ஸ்லெவன் பஞ்சாபை எதிர்கொள்கிறது.

17 புள்ளிகளுடன் 4-வது இடத்தில் உள்ள சென்னை அணி, தனது கடைசி லீக் போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே, ப்ளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறும்.

டெல்லியில் இரவு 8 மணிக்கு நடைபெறும் மற்றொரு போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரை எதிர்கொள்கிறது.

செஸ்

மாஸ்கோவில் நடைபெறும் உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் - இஸ்ரேலின் போரிஸ் **Gelfand** இடையே 5-வது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

12 சுற்று ஆட்டங்களில் இதுவரை நடைபெற்ற 4 போட்டிகளும் டிராவில் முடிவடைந்தது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது,